REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

திமுக தின இதழ் ★ ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 23உ புதன் (7—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 24உ வியாழன் (8—8—57) [இதழ் 45

இலட்சக் கணக்கானோர் வேலை தேடுகின்றனர்

1957 ஜனவரி முதல் ஜூன்வரை வேலை தேடித்தரும் நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 7,92,912 என்றும், இவர்களில் 2,37,546 பேர்கள் படித்தவர்கள் என்றும் மத்திய தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபீத் அலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

பண்டிதர் பிடிவாதப் போக்கின் எதிரொலி!

உறுதிகுலையாதீர்! கண்ணியம் காப்பீர்! கட்டுப்பாடு வேண்டும்!

போராட்டத்தில் ஈடுபடும் தபால் ஊழியருக்கு பொதுச்செயலாளர் அறிவுரை

"தபால்-தந்தி ஊழியர்களுக்கு ஒன்று சொல்லுவேன்—'நீங்கள் இந்த நேரத்தில்தான், மிக்க நெஞ்சுரத்தோடு, எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாயிருக்கவேண்டும்.' உங்களின் மனஉறுதி குலையக்கூடாது; உங்களிடம் கட்டுப்பாடு கொஞ்சமும் குறையக் கூடாது. கண்ணியம் குன்றக்கூடாது.

"நீங்கள் முன்னோடிகளாயிருந்து போராட்டத்தில் ஈடுபடுகிறீர்கள். 90 சதவிகிதம் பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று சர்க்காரே கணக்குத் தந்திருக்கிறது. ஆனால், நீங்கள் நூற்றுக்கு நூறு ஒன்றுபட்டு, போராட்டத்தை வெற்றிகரமாக்க வேண்டும்.

"வாழைப்பழத் தோல் தடுக்கிக் கீழே விழுந்து சாவதைவிட—காச நோயும், காலராவும் வந்து ஈளைகட்டி இருமி, பத்து நாள் படுக்கையில் கிடந்து சாவதைவிட—ஒரு நல்ல காரியத்தில் ஈடுபட்டு, பலருக்காகப் பாடுபட்டுச் சாவதேமேல்; அதுவே வீரச்சாவு என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. கோழைகளும் போராட்டத்தின் போது, வீரர்களாக வேண்டும். நடுக்கம் கூடாது! தளர்ச்சி தோன்றக்கூடாது! போராட்டத்தில் ஈடுபடாமலிருந்தவன் என்ற அவமானச் சின்னமாக—கேலிக்குரியவனாக எவரும் இருக்கக்கூடாது.

"உங்களிடை இப்போதுதான் வேறெப்போதையும்விட மனஉறுதியும், கட்டுப்பாடும், கண்ணியமும் மிக அதிகம் தேவை!

"உங்கள் முயற்சி—அறப்போர் வெல்க! உங்களின் உள்ளம் வாழ்க! நீங்கள் வளர்க என்று வாழ்த்துகிறேன்"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 6—8—57 அன்று மாலை 6-30 மணியளவில் பி. எம். ஜி. அலுவலக மைதானத்தில் தோழர் இலட்சுமணன் தலைமையில் நடைபெற்ற தபால் ஊழியர் கூட்டத்தில் பேசுகையில், குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதுபோல தபால் ஊழியர்கள், தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் வெற்றி கண்டுவிட்டால், அதன் பயனாக எல்லா மத்திய சர்க்கார் ஊழியர்களும் பயனடைவர். அதனைக் காரணமாகக் காட்டி மாநில சர்க்கார் ஊழியர்களும் தங்கள் நியாயத்தை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிக்க முடியும். எனவே, தபால் ஊழியர்களைவிட குறைவான ஊதியம் பெறுபவர்கள் இருப்பினும், அவர்கள் எல்லாம் பயனடைய நியாயம் பெற உதவும் வகையில்தான், தபால் ஊழியர் போராட்டம் அமைந்திருக்கிறது.

"வீட்டில் நான்கு பிள்ளைகள் இருந்தால், ஏதாவது ஒரு பிள்ளைதான் தவிர்க்க முடியாத இன்றியமையாத பிள்ளையாகவும்—நல்ல பிள்ளையாகவும்—திறமையான பிள்ளையாகவும் இருக்க முடியும்; அந்தப் பிள்ளைதான், தங்களுக்குத் தேவையானதைத் தந்தையிடம் கேட்டுப் பெறக் கூடிய பிள்ளையாக இருக்கும். அந்தப் பிள்ளை தந்தையிடம் சென்று தனக்கு வேண்டியதைக் கேட்டால், தந்தை தட்டாமல் தரவேண்டியவராயிருப்பார், ஆனால் அவர், அப்படி அந்தப் பிள்ளைக்கு கேட்டதைத் தரச் சம்மதித்துவிட்டால், கேட்ட பொருள் எல்லா பிள்ளைகளுக்கும் கிடைக்கும்; அதுபோலத்தான், சம்பள உயர்வு—பஞ்சப்படி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக, நல்ல—இன்றியமையாத—திறமையான பிள்ளையாக இருக்கும் தபால் ஊழியர்கள் போராடி வெற்றி கண்டால், எல்லா ஊழியர்களும் அதனால் பயனடைவது நிச்சயம்.

"எனவே, தபால் ஊழியர் போராட்டத்திற்கு மக்கள் அனைவரும் ஆதரவு தருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

"சர்க்கார் ஒன்றை எண்ணிப் பார்க்கவேண்டும். இலட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால், வேடிக்கைக்காக—விளையாட்டிற்காகவா ஈடுபடுகிறார்கள்? அதுவும் பயங்கரமான சட்டத்தைக் காட்டி மிரட்டிய பிறகும் ஊழியர்கள் போராட முற்படுகிறார்கள் என்றால், அது அவர்களின் வாழ்வுப் போராட்டம் என்பதைத் தவிர வேறென்ன? இதனை சர்க்கார் இந்த நெருக்கடியான நேரத்திலேனும் உணர்வது நல்லது.

"கிராக்கிப்படியை உயர்த்த வேண்டும் என்று ஊழியர்கள் கோருவது எந்தவகையில் தவறானது? முதல் சம்பளக் கமிஷன் தந்த சிபாரிசுப்படி அவர்கள், விலைவாசி உயர்வுக்கு ஏற்ப—வாழ்க்கைப்புள்ளி உயர்வுக்கு ஏற்ப கிராக்கிப் படியை உயர்த்த வேண்டுமெனக் கேட்பது எப்படித் தவறானதாகும்?

"பஞ்சப்படி என்பது, யுத்தக் காலத்தில் அல்லது நெருக்கடி காலத்தில் பொருள்களின் விலை உயரும் என்பதால், அந்த நிலையைச் சரிக்கட்டுவதற்காகத் தரப்படுவதாகும். ஆனால் யுத்தம் முடிந்து 12 ஆண்டுகள் ஆகியும், இந்த நாட்டில் ஏறிய விலைகள் இறங்கவில்லை. மேலும், இனி இறங்கவே இறங்காது என்ற நிலையும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில், இன்னும் பஞ்சப்படியை—அந்தப் பெயரில் தருவது என்பது வெட்கக்கேடானது; ஆகவே, பஞ்சப்படியையும் அடிப்படைச் சம்பளத்தோடு சேர்த்துத் தரவேண்டும் என்கிறார்கள்; இதில் என்ன தவறு இருக்கிறது?

"இப்படி இதுபோன்ற நியாயமான கோரிக்கைகளை ஈடேற்ற சர்க்கார் மறுப்பானேன்? 'பணம் இல்லை' என்கிறார்கள். இது உண்மையா? நிர்வாகம் சீர்பட நடைபெறுமானால், மக்களின் வரிப் பணம் பல வழிகளிலும் பாழாவது நிற்குமானால், பணம் கிடைக்காதா?

"இராணுவச் செலவு இன்று எத்தனை கோடி? ரூ. 265 கோடி செலவிடப் போகிறார்கள் இந்த ஆண்டில் மட்டும்! இது சென்ற ஆண்டைவிட ரூ. 50 கோடிக்கும் அதிகம்! இப்படி அதிகம் செலவிட்டு விடுவதினாலேயே இந்த இராணுவம் பலமுடையதாகி விடுகிறதா?

"மக்கள்சபையில் ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டினார்—'இந்த ரூ. 50 கோடி அதிகம் செலவிடுவதினாலும்கூட, பாகிஸ்தான் படையெடுத்தால் அதைச் சமாளிக்கமுடியுமா என்றால், முடியாது' என்று கூறினார். அப்படி இருக்க, எதற்காக இத்தனை கோடி செலவு?

"உலகில் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் இன்று, இது போல பிரும்மாண்டமான இராணுவத்தை நம்பித்தான் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கின்றனவா? இல்லையே! பின் இந்தியாவில் எதற்காக இத்தனை கோடி ரூபாய் செலவு?

"மேலும், இத்தனை கோடியும் இராணுவத்திற்கே செலவாகிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. பெரும் பகுதியை 'காண்டிராக்டர்'கள் சாப்பிட்டு விடுகிறார்கள். இதை எல்லாம் கண்காணித்தால் ஊழியர்களுக்குத் தர பணம் கிடைக்காதா?

எனவே, சர்க்கார், ஊழியர்களை மிரட்டுவதில் பயனில்லை. நியாயமான கோரிக்கைகளை ஈடேற்றுவதில் சர்க்கார் பிடிவாதம் காட்டுமானால், அது விபரீதமான நிலைகளை உருவாக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

தபால்-தந்தி ஊழியர் வேலைநிறுத்தம் நடைபெற்றே தீரும்

சம்மேளன போராட்டக் குழுவின் தீர்க்கமான முடிவு

கருப்புச் சட்டத்தின் துணை தேடிவிட்டது டெல்லி!

எதிர்க்கட்சியினரின் ஆவேசமான கண்டனம்

புதுடில்லி, ஆக. 7—

பண்டித நேரு விடுத்த வேண்டுகோளுக்குப் பிறகு அவரைச் சந்தித்து நிலைமைகளைத் தெளிவுபடுத்திய பின்னும் பண்டிதர் பிடிவாதத்தைத் தளர்த்த மறுத்துவிடவே, தபால்-தந்தி ஊழியர் தேசிய சம்மேளனத்தின் போராட்டக் கமிட்டியினர், ஆகஸ்டு 8-ந் தேதி நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தம் செய்வது என்ற முடிவை மாற்றிக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்திருக்கின்றனர்.

நேற்று மாலை தபால்-தந்தி ஊழியர் தலைவர் கோஷ், மற்றும் சிலருடன் சேர்ந்து பண்டித நேருவைச் சந்தித்து ஒரு மணி நேரம் வரை உரையாடினர்.

இடைக்கால நிவாரணம் பற்றி பண்டிதர் உருப்படியாக எதும் செய்ய மறுத்துவிட்டதால், போராட்டக் கூட்டுக்கமிட்டி கூடி 5 மணி நேரத்திற்குமேல் விவாதித்துவிட்டு, 'வேலை நிறுத்த முடிவினை மாற்றுவதற்கில்லை' என்று தெரிவித்துள்ளனர்.

"என்றாலும், இன்னும்கூட அமைதியான வழியில் பரிகாரம் காண இடம் இருக்கிறது; எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஏற்படக் கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும் என்று பண்டித நேரு அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்"

என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்தியாவின் பல பாகங்களிலும் தபால்—தந்தி ஊழியர் சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில்....

'தமிழ் நாட்டில், 90 சத விகிதத்திற்கும் அதிகமான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள்' என்று, உயர்தர அதிகாரிகள் கருதுகின்றனராம்!

ஆனால், சங்கத் தலைவர்களின் கருத்துப்படி, இந்த மதிப்பீடு இன்னும் சற்று அதிகம் என்று தெரிய வருகிறது.

கருப்புச் சட்டம் நிறைவேற்றம்!

மக்கள் சபையில் நேற்று எதிர்க்கட்சியினர், 'வெட்கம், வெட்கம்' என்று முழங்கிவிட்டு, வெளிநடப்புச் செய்தனர். அத்தியாவசிய சர்வீசுகள் மசோதா சபையில் நிறைவேற்றப்பட்டபோதுதான் எதிர்க்கட்சியினர் அவ்வாறு செய்தனர்.

மசோதா, 'அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட்டிருப்போர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைச் சட்ட விரோதமானது' என்று கூறுகிறது.

மசோதா குறித்து 10 மணி நேரம் நேற்று முன்தினமும் நேற்றும் விவாதம் நடைபெற்றபோது மசோதாவின் தீய நோக்கங்களையும், அதன் கொடிய விளைவுகளையும் விளக்கி மசோதாவைக் கண்டித்தனர்.

அவர்கள் தந்த பல திருத்தங்களையும் காங்கிரசார் நிராகரித்திருக்கின்றனர்.

மசோதாவுக்கு ஆதரவாக 226 பேரும், எதிராக 51 பேர்களும் வாக்களித்தனர் என்று தெரிய வருகிறது.

ஏஜண்டுகளுக்கு முக்கிய அறிவிப்பு

தபால்—தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆகஸ்டு 9-ந் தேதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும் நிலையேற்பட்டு, அதனால் 'நம் நாடு' இதழ் அஞ்சல் மூலம் அனுப்ப இயலாத நெருக்கடி நிலை ஏற்படுமேயானால் நெருக்கடி தீர்ந்ததற்கு பிறகு மொத்தமாக அனுப்பி வைக்கப்படும்.

அஞ்சல் மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுகள் அப்படி நெருக்கடி நாட்களில் புகைவண்டி மூலம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டென்றால் அதன் விவரத்தை உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த நெருக்கடி காலத்தில் ஏஜெண்டுத் தோழர்கள் பட்டியல் தொகையை பாங்கி 'டிராப்ட்' மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி: 'நம் நாடு'
7—8—57.

இந்திய நாட்டின் மண்ணில் 6,000 கோடி டன் நிலக்கரி

இந்தியாவில் மொத்தம் ஆறாயிரம் கோடி டன் நிலக்கரி புதைந்து கிடப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் 1956 ஜூலை 1-ந் தேதி முதல் 1957 ஜூன் 30-ந் தேதி வரையுள்ள காலத்தில் 12 துணித் தொழிற்சாலைகளுக்கு மொத்தம் ரூ.1,95,00,000 கடன் தந்துதவியிருக்கிறதாம்!

நம் நாடு

சென்னை 7—8—57 புதன்

ஆட்சியினர் உணர்ந்தனரா?

அண்மையில் மக்கள் சபையில் பண்டிதநேரு, மிகக் கவலை தரும் தகவல் ஒன்றைத் தந்தார். சில ஆயிரம் எஞ்சினீயர்கள் வேலையின்றித் தவிக்கிறார்கள் என்பதுதான் அந்தத் தகவல். இது கவலை மிகத் தருவதற்குக் காரணம் எளிதில் உணரக்கூடியதுதான். தொழிற் கல்விப் பட்டம் பெற்றவர்களிலேயே இப்படிப் பலர் வேலையற்றிருக்க நேரிடுகிறதே என்பது ஒன்று; பின் இந்த உயர்தரக் கல்வி கற்றவர்கள்—பட்டம் பெற்றவர்களிலேயே வேலையற்றோர் தொகை ஆயிரக் கணக்கில் என்றால், இதர துறைக் கல்வி கற்றவர்களில் எத்தனை இலட்சம் பேர் வேலையற்றிருக்கிறார்களோ என்பது மற்றொன்று.

இத்தனைக்கும் மேலாக, இப்படிப் படித்தவர்கள் வேலையற்றிருப்பதால், அவர்கள் பெற்ற அறிவுத்திறன் நாட்டுக்குப் பயன்படாமல் போவதால் ஏற்படும் நஷ்டம்பற்றியது, மூன்றுவது.

எஞ்சினீயரிங் பட்டம் பெற்றவர்கள், வேலையற்றிருப்பதற்குக் காரணம் என்று பண்டிதர் தந்திருக்கும் விளக்கம், முழுவதுமாக சரியானதல்ல; அதாவது, 'அவர்கள் விரும்புகிற வகையில் அவர்களுக்கு வேலைதர முடியவில்லை' என்கிறார், பண்டிதர். இந்தக் காரணம், இரண்டொன்று, அல்லது சில எஞ்சினீயர்களைப் பொறுத்தவரையில் சரியானதாயிருக்கலாம்; எல்லோரையும் பொறுத்து சரியானதாயிருக்கமுடியாது.

வேகமாக வளர்ந்துவரும் தொழிற்துறைத் தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்கொப்ப, இதுபோன்ற தொழிற்கல்விகள் அளிக்கப்படுவதுதான், படித்துப் பட்டம் பெற்ற பலர் வேலையற்றிருப்பதையும், அதனால் ஏற்படக் கூடிய நஷ்டத்தையும் தவிர்ப்பதற்குள்ள ஒரே வழியாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்று பிரம்மாண்டமான திட்டங்களை, மக்களை எத்தனை கசக்கிப் பிழிந்தேனும் அவர்களிடமிருந்து பணம் பெற்று நிறைவேற்றிவிட வேண்டும் என்று துடிப்புக்காட்டுகிற ஒரு சர்க்கார், குறிப்பிட்ட ஒரு எதிர்காலத்திற்கு, எஞ்சினீயர்கள் போன்ற தொழிற்கல்வியறிவு பெற்றவர்களின் தேவையைக்கூட கணக்கிடமுடியாதவர்களாயிருக்கக்கூடாது. ஒருபுறம், தொழிற்கல்வி நிலையங்களை கணக்கில்லாது அதிகரித்துக்கொண்டே போவதும், மறுபுறம், அந்தக் கல்வி நிலையங்களிலிருந்து வெளிவருவோருக்குத் தகுதியான வேலை கிடைக்காமலிருப்பதும், விரும்பத்தக்கது அல்ல.

மேலும், சில துறைத் தொழில்களைத் திறம்பட நடத்துவதற்கு ஆட்கள் இல்லை என்ற நிலையும், மறுபுறம் பல ஆயிரம் எஞ்சினீயர்களுக்கு வேலை இல்லை என்ற நிலையும், வளர்ச்சிக்கு உதவக் கூடிய முறையான திட்டமிடுபவர்கள் உருவாக்கக் கூடாதவையாகும்.

தொழில் துறையில், மிக நுணுக்கம் வாய்ந்த உயர்தரக் கல்விப் பட்டம் பெற்றவர்களைப் பொறுத்த இந்தப் பிரச்சினை ஓர்புறம் இருக்க, ஆண்டுதோறும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படித்துவிட்டு வெளிவரும் இளைஞர்களைப் பொறுத்த பிரச்சினை வேறு, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துகொண்டே இருக்கிறது.

பொதுவாக, வேலையற்றோர் பிரச்சினையின் ஒரு கூறுதான் இது என்றாலும், இதில் விசேடமாகக் கவனம் செலுத்தவேண்டிய அம்சம் ஒன்றும் இருக்கிறது. அதுதான், தொழில் செய்வதற்கு உபயோகப்படாத கல்வி கற்றவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகி, ஒரு குறிப்பிட்ட கட்டம் வரும்போது இவர்கள், இந்தக் கல்வியைப் பெருமலேயே செய்யக் கூடிய வேலைகளை ஏற்கவேண்டியுள்ளது. இதனால், இவர்கள் உபயோகமற்றுப் போய்விடுகிற ஒரு கல்வியைப் பெறுவதற்காகச் செலவிட்ட பல ஆயிரம் பணமும், பணமதிப்பில்லாக் காலமும் வீணாகிவிடுகிறது என்பதுதான்.

எனவே, இன்றுள்ள பிரதான பிரச்சினைகளில் தலையாயது, நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் தேடவேண்டியதாகும். ஆனால் சர்க்கார், இதை உணர்ந்ததாகக் காணோம். அவர்களது திட்டங்கள், இந்த வேலையற்றோர் பிரச்சினையைப் பொறுத்து, உருவான பலன்களை விளைவிக்கக்கூடியது என்று எதிர்ப்பதற்கில்லை. திட்டங்களால் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள், பிரச்சினையின் கடுமையைக் கடுகளவு குறைக்கவும் பயன்படாது என்பதை முதல் திட்ட விமரிசனம் தெளிவாக்குகிறது.

காங்கிரஸ் ஆட்சியாளர், மக்கள் வரிப் பணம், நாட்டுச் செல்வம், இயற்கை வளம், இவற்றை மட்டுமல்ல—இழந்துவிட்டால் பெற முடியாத காலத்தையும், மக்களின் அறிவாற்றலையும், உழைப்புச் சக்தியையும் கூட விரயமாக்குவதைக் கண்டு எவரும் வருந்தாமலிருக்க முடியாது.

திடீர் அக்கறை பிறந்துவிட்டது!

சென்னை, ஆக. 5—

என். ஜி. ஓ.-வினருக்கு அரசாங்கம் வழங்கிவரும் மருத்துவ சலுகைகள், திடீரென்று அவர்களின் பெற்றோர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது; இது சம்பந்தமாக, மருத்துவச் சட்டத்தையும் சர்க்கார் திருத்தியுள்ளதாம்!

அணுசக்தி மின்சாரம்

இந்தியா தயாரிக்குமாம்!

பம்பாய், ஆக. 5—

அணுசக்தியைக் கொண்டு 1962-க்குள் இந்தியா மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது என்று அணுசக்தி குழுத் தலைவர் டாக்டர் பாபா தெரிவித்துள்ளார்.

தி. மு. க. தேர்தலில் ஈடுபட்ட பின்..!

'தமிழகத்தின் அரசியல் தூய்மைப்படுகிறது'

'அறிவுப்பாதையில் செல்லும் கழக வளர்ச்சியை இனி எவரும் தடுத்துவிட முடியாது'

'ஆளும்கட்சியினர் போக்கு மாறவேண்டும்'

புரசைக் கூட்டத்தில் க. அன்பழகன்

31—7—57 அன்று புரசை அறிவு வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவில் கலந்துகோண்ட தோழர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்த மன்றத்தார் நடத்திவரும் இரவுப் பள்ளியில் ஏழைப் பிள்ளைகள், கட்சி வேறுபாடின்றி படித்துவருவது பெருமைக்குரியதாகும். இளைஞர்கள் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறு எந்தவித அரசியல் நோக்கமும் இதில் இல்லை. அதேபோன்று, இந்த மேடையிலும் கூறப்படும் கருத்துக்கள் பொதுவாக நாட்டில் நிலவிடும் நிலையைச் சுட்டிக்காட்டி, மக்களின் எண்ணங்களையும், உணர்ச்சியையும் நல்ல நோக்கத்திற்குப் பயன்படச் செய்து, எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்பதற்கு வழிகாட்டவும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

"நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிவரும் சேவைக்கு மக்கள் நல்ல மதிப்புக் கொடுத்து ஆதரவளித்து வருவதற்குக் காரணம் என்னவென்று எண்ணிப்பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் குறைகளைக் கண்டறிந்து, அவைகளைப் போக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருப்பது நிச்சயமாகப் புரியும்.

"இன்று மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினராக மாறிவருகின்றனர். முன்பு யார் எங்கு பேசினாலும், சுதந்திர கீதம் கேட்கப்பட்டது; 'வெள்ளையன் ஒழியவேண்டும்; அந்நிய ஆதிக்கம் அகலவேண்டும்; அடிமை விலங்கு அறுபடவேண்டும்' என்று பேசியவர்களுக்கு மக்கள் மதிப்பு கொடுத்தார்கள். இதையேதான், நாட்டில் பெரிய மனிதர்கள் என்று கருதப்பட்டவர்களெல்லாம் தாங்கள் செல்லுமிடங்களிலெல்லாம் பேசினார்கள்; பெரிய பெரிய ஏடுகளும் அதைப் பற்றியே எழுதிவந்தன. இந்த உண்மையை, நம்மவரில் முதியவர்கள், பெரியவர்கள் அறிவார்கள்.

"அதே நிலையில் இன்று யார் எங்கு பேசினாலும், அவர்கள் எந்தக் கருத்தில் பேசினாலும், நிச்சயமாக நம்மைப் பற்றிப் பேசாதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

"முன்பு 'திராவிடர்' என்று கூறத் தயங்கியவர்கள், வடநாடு—தென்னாடு என்று பேச அஞ்சியவர்கள், இப்போது நம் பாதையிலே வரத் துவங்கியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் 'திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அறிவு இயக்கம்; இந்த நாட்டின் விடுதலை இயக்கம் என்பதுதான். திண்ணையிலே உட்கார்ந்து இருப்பவர்களகூட ஏதேதோ பேசிவிட்டு, 'அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் எதிர்க்கிறார்கள்; அவர்கள் சொல்லுவதும் சரிதான்' என்றாவது பேசுவார்கள்; அல்லது, 'இப்படி யெல்லாம் இருக்கிறதே; ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புக்கொள்ளவில்லை' என்றாவது கேட்பார்கள்.

"நான் சொல்லுவதை நீங்கள் நாட்டில் காணலாம். ஒரு வீட்டில் வயதுவந்த ஒரு வாலிபனும், ஒரு பருவப் பெண்ணும் அடிக்கடி கலந்துபேசி காதல் புரிவதைப் பார்க்கிறவர்கள், 'இவர்களுக்கு ஏன் இன்னும் திருமண மாகவில்லை?' என்றாவது கேட்பார்கள்; அல்லது, 'ஏன் செய்து வைக்கக் கூடாது?' என்றாவது கேட்பார்கள்.

"அதேபோல, தி. மு. கழகமும் நாட்டு மக்களின் ஒப்பற்ற கழகமாக வளர்ந்துள்ளது; எங்கள் கொள்கைகளைப் பலர் ஆதரிக்கிறார்கள்; சிலர் மாற்றம் வேண்டுமென விரும்புகிறார்கள்; வேறு சிலர், 'சில திருத்தம் வேண்டும்' என்கிறார்கள்; ஆனால் பொதுவாக, நாங்கள் கூறுவதை எல்லோரும் அக்கறையுடன் கவனிக்கிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகம் இன்று எங்கும் பரவியுள்ளது. எங்கும் நிறைந்த மக்களின் 'ஆண்டவனா'க மதிக்கப்பட்டுள்ளது.

"சில ஆண்டுகளுக்கு முன்னர் நாம் கழகத்தை ஆரம்பித்த நேரத்தில் பலர் சந்தேகித்தனர்—சிலர் குறைகளைக் கூறினார்கள்—வேறு சிலர் சாபம் கொடுத்தார்கள்; 'இந்தக் கழகம் எத்தனை நாட்கள் இருக்கும்?' என்று தவறான ஆருடத்தில் இறங்கினார்கள்; ஆனால், இன்று திராவிடமுன்னேற்றக் கழகம் படித்தவர்களிடையேயும், தொழில் அறிவு படைத்தவர்களிடமும், பாட்டாளி மக்களிடமும், மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் வட்டாரத்திலும் பரவி நல்ல மதிப்பை பெற்றுள்ளது. அந்த நிலை மேலும் நாம் தேர்தலில் ஈடுபட்ட பிறகு உயர்ந்துள்ளது.

"நாம் தேர்தலில் நிற்பதற்கு முன் காமராசரும், மற்றவர்களும் என்ன சொன்னார்கள்? 'மக்கள் ஆதரவு பெற்றுவிட்டதாகக் கூறுகிறார்களே, அதைத் தேர்தலில் நின்று காட்டட்டுமே' என்று வம்பு பேசினார்கள். பண்டித நேரு என்ன சொன்னார்? 'நாட்டில நல்ல ஜனநாயகம் வளர நல்ல எதிர்க்கட்சி வேண்டும்' என்று கூறினார். அதைக் கேட்ட காமராசர், 'ஹிஸ்மாஸ்டர் வாய்ஸ்' போல, மறுநாள் நம்மைப் பார்த்து, 'மேடையில் பேசினால் போதுமா? எங்களுக்கும் ஒரு எதிர்க்கட்சி வேண்டும்' என்று நம்மை வம்புக்கிழுத்தார். அவர் அழைப்பை ஏற்று தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்டது. அப்போது என்ன சொன்னார்கள்? நம்மை வரவேற்றார்களா? 'ஆழம் தெரியாமல் காலைவிடுகிறார்கள்' என்று பேசினார்கள்; அவர்கள் எண்ணத்திற்கு மாறாக நம் கழகம், சட்டசபையில் பொலிவுடன் விளங்குகிறது.

"எந்தக் கட்சி சட்டசபையில் புகுந்தால் வடநாடு—தென்னாடு என்று பேசும் என்று அஞ்சினரோ, எந்தக் கட்சி நேரடியாக அரசியலில் ஈடுபட்டால் காங்கிரஸ் ஊழல் வெளிப்படும் என்று அஞ்சினரோ, அந்தக் கழகம் இன்று சட்டசபையில் இடம் பெற்றுவிட்டது. 'இவர்கள் 15 பேர்கள் தானே' என்கிறார்கள், 150 பேர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியினர்! நாங்கள் என்ன சண்டைக்கா வந்துள்ளோம்? விஷயங்களை எடுத்துச் சொல்ல 15 பேர் வேண்டுமா? ஒரு அண்ணா போதாதா? ஆட்சியாளரிடம் அந்த அரசியல் அறிவு உள்ளது; அதைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"பலபேருடைய எதிர்ப்பைப் பெற்ற நாங்கள், பெற்ற வெற்றி உண்மையில் பெரிய வெற்றி! முதல் அனுபவத்தில், இந்த அளவிற்கு வேறு எந்தக் கட்சியும், இவ்வளவு குறுகிய காலத்தில் வெற்றிபெற்றதில்லை என்பதை நினைத்து நாங்கள் பெருமைப்படுகிறோம். தென்னாட்டின் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தி நாங்கள் பண பலமில்லாமல், பத்திரிகை பலமில்லாமல் அடைந்துள்ள இந்த வெற்றி நிச்சயமாக பெரியதாகும்.

அரசியலில் எண்ணிக்கையல்ல முக்கியம்; எண்ணம்தான்!

"சட்டசபையில் அவ்வப்போது ஏற்படும் விவாதங்களில் நாங்கள் கலந்துகொண்டு நல்ல பல கருத்துக்களைத் தருகிறோம். ஆளும் கட்சியினர் ஜனநாயகத்தை மதிப்பவர்களானால், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு மதிப்புத் தரவேண்டும்.

"நாம் தேர்தலில் ஈடுபட்டதின் விளைவாக, யார் நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளக் கூடாது என்று கருதிவந்தார்களோ அவர்கள் எல்லாம் நம்மைப் பற்றி அறிந்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நம்மைப்பற்றி ஒருவரிகூட எழுதாத ஏடுகள்—'எழுதுவதே பாபம்' என்று கருதிய ஏடுகள் எல்லாம் இன்று நம்மைப்பற்றி எழுதிவருகின்றன. சில, வழக்கம் போல எதிர்பார்த்தபடியே கண்டித்தும் எழுதுகின்றன.

"தேர்தலில் ஈடுபடுவது சனநாயகக் கடமை என்று உணர்ந்து, அவ்வாறு ஈடுபட்ட நாம், நாட்டுப் பிரிவினை கீதத்தை உலகறியச் செய்து வரும் கட்டத்தை வந்தடைந்துள்ளோம். தமிழகத்தின் அரசியலே தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறகிறது; தமிழ் மணம் கமழ்கிறது; நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

"நாங்கள் அடுக்கு மொழியில் பேசுவதாக காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள்; அவர்களும் பேசட்டும். ஆனால், 'சிந்திரி—முந்திரி என்று பேசுபவர்கள் கந்திரிகள்' என்று, அறியாமல் அடுக்கு மொழியில் பேச ஆசைப்பட்டு அமைச்சர்களையே தாக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

"நாம், ஆளும் கட்சியினர்களைக் குறை கூறுகிறோம் என்கிறார்கள்! ஆனால் சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் பேசிய பேச்சைத் தொகுத்துப் பார்த்தால் அவர்களே என்ன செய்கிறார்கள் என்பது புரியும். 'பேச்சை விற்கிறோம்' என்கிறார்கள். இதில் என்ன தவறு? 'பணக்காரன் தரும் நன்கொடை, குஷ்டரோகி கையால் தொட்டுத் தந்த வெண்ணெய்' என்று அண்ணா கூறிய வழியில் வந்த நாங்கள் வேறு என்ன செய்வது? தி. மு. க. அதைச் செய்கிறது—இதைச் செய்கிறது' என்று பார்த்துப் பொறாமைப்படாதீர்! நீங்களும் முயற்சி செய்யுங்கள்! அதுதான் நேர்மை!

"திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஆற்றல் இருக்கிறது; அந்தக் கழகம் அறிவைத் துணை கொண்டு நடத்தப்படுகிறது. எனவே, அது பல காரியங்களைச் செய்ய முடிகிறது. உங்களுக்கு மேலிடத்தின் அனுமதிவேண்டும்; அவர்கள் கூறினால்தான் எதையும் செய்வீர்! உங்களுக்கு மக்கள் முக்கியமல்ல—எங்களுக்கு மக்கள் தான முக்கியம்!

"இன்றைய ஆட்சியில் மலிந்துள்ள ஊழல்களுக்கு அரசாங்கம் தான் பொறுப்பு என்பதைமறந்து உண்மையை மறைக்க முயல்வது கடமையில் இருந்து தவறுவதாகும்."

'பஞ்சப் படியை சம்பளத்துடன் சேர்த்துத் தர மறுப்பானேன்?'

மதுரையில் தபால் ஊழியர்கள் கூட்டத்தில் சி. பி. சிற்றரசு கேள்வி

மதுரை, ஆக. 2—

" தரப்படும் பஞ்சப்படியை சம்பளத்தோடு சேர்த்துக் கொடு என்றால், நேரு ஏன் மறுக்கிறார்? விலைவாசிகள் இறங்கிவிடும் என்கிறாரா? அந்த அறிகுறிகளே காணப்படவில்லையே! அப்படியிருந்தும் அதை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்ப்பதில் என்ன கஷ்டம்? என்ன கவலை?"

—இவ்வாறு இன்று மாலை திலகர் திடலில் நடைபெற்ற 'தேசிய தபால் தந்தி ஊழியர்கள் சம்மேளன'ப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட சி. பி. சிற்றரசு அவர்கள் கூறினர்.

கூட்டத்திற்கு திரு. தர்மராச சந்தோசம் தலைமை வகித்தார்.

தொடக்கத்தில் தலைமை அஞ்சல் அலுவலகத்திலிருந்து 2000-க்கு மேற்பட்ட மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டுத் திடலை வந்து அடைந்தனர்.

தோழர்கள் சசிவர்ணம் (பா. பி.), எஸ். டி. பாலு (த. க.), திருமதி பங்கசம்தாஸ் (பி. சோ.), சங்கரையா (கம்) ஆகியோர் பேசினர்.

இன்சூரன்ஸ் (மதுரை) ஊழியர்கள் சங்கத் தலைவரும், பாங்கி ஊழியர்கள் சங்கத் தலைவருமான முனிரத்னம் அவர்களும் தங்கள் ஆதரவை தபால்-தந்தி ஊழியர்கள் போராட்டத்திற்குத் தந்து பேசினர்; 2-வது சம்பளக் கமிஷன் நியமிக்கக் கோரினர்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மேலும் பேசியதாவது:—

"வேலை நிறுத்தம் செய்யப் போகும் தபால்-தந்தி ஊழியர்களைப் பார்த்து நேரு கேட்கிறார்—'உள்நாட்டு வெளிநாட்டு ஆபத்துகள் பல நம்மைச் சூழ்ந்திருக்கையில் இப்படிச் செய்பலாமா?'—என்று! இவர்கள், தங்கள் குறைகளை 1954-லேயே தெரிவித்தார்கள்; இதுவரை ஏன் கவனிக்கப்படவில்லை? மேலும் பண்டிதர், 'இது சில அரசியல் கட்சிக்காரர்கள் தூண்டிவிடும் அரசியல் பிரச்சினை' என்கிறார்; அதுவும் தவறானதாகும்.

"சுதந்திரம் என்றால் என்ன? மக்கள் வாழ்க்கையில் மாறுதல் காட்டுவதல்லவா சுதந்திரம்? தங்கள் வாழ்க்கையில் மாறுதல் காண அவர்கள் விரும்புகின்றனர்; அவர்கள் ஏதாகிலும் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சர்க்காரை அணுகுவதன் காரணமே, ஆள்வோரின் கொடியில் அசோகச்சக்கரம் இருப்பதால்தான்! அசோகன் எந்நேரத்திலும் தன்னை மக்கள் காணலாமென்றான்! ஆனால் கொடியிலே அசோகனை வைத்துக்கொண்டு, சொல்லொன்று செயலொன்று இருக்கும் நேருவோ, தன்னைப் பார்க்கவரும் ஊழியர்களைப் பார்ப்பதற்குக்கூட நேரமில்லை என்கிறார்.

"இந்தியாவின் 36 கோடி மக்கள் கணக்கில்தான் இந்த 2 இலட்சத்து 70 ஆயிரம் ஊழியர்களும் அடங்கியிருக்கிறார்கள்; 'அவர்களும் நம் மக்கள்' என்ற முறையில் இந்தியாவின் ஏகக் குரலை அவர் மதித்தாகவேண்டும்."

கூட்டத்தில் பொதுமக்களுடையவும் தொழிற் சங்கங்களுடையவும் ஆன ஒத்துழைப்பை வேலை நிறுத்தத்திற்குக் கோரி தீர்மானங்கள் நிறைவேறின.

★

சேலத்தில் சர்வ கட்சிப் பொதுக்கூட்டம்

தபால்—தந்தி ஊழியர் அறப்போருக்கு ஆதரவு

சேலம், ஆக. 5—

சேலம் தபால்-தந்தி இலாகாவைச் சேர்ந்த 400 ஊழியர்கள் 4-ந் தேதி மாலை நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்றனர்.

'விலைவாசிகளைக் கட்டுப்படுத்து; தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்காதே; மத்திய மாகாண அரசாங்க ஊழியர்கள் ஒற்றுமை ஓங்குக; இரண்டாவது சம்பளக் கமிஷனை ஏற்படுத்துக' என்ற ஒலிகளை முழங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

தலைமை தபால் காரியாலத்தை ஊர்வலம் அடைந்ததும் வழக்கறிஞர் ஆர். தீனதயாளு தலைமையில் கூட்டம் நடைபெற்றது; ஊழியர்களின் கோரிக்கைகளை ஆதரித்து தோழர்கள் ஏ. சுப்பிரமணியம், வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம், கே. வெங்கட்டபெருமாள் எஸ். நாகலிங்கம், வி. நடராசன் ஆகியவர்கள் பேசினர். (ந. நி.)

★

கருப்புச் சட்டத்திற்கு 2,000 ஊழியர்கள் கண்டனம்

புதுடில்லி, ஆக. 5

மக்கள்சபையில் கொண்டுவரப் பட்டுள்ள கருப்புச் சட்டத்தை எதிர்த்து 2,000-க்கு மேற்பட்ட மத்திய அரசாங்க ஊழியர்கள் பாராளுமன்றத்தின்முன் இரண்டு மணி கோரம் ஆர்ப்பாட்டம் செய்தனர். 'சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும்' என்று அவர்கள் முழக்கமிட்டு, அமைதியாகக் கலைந்தனர்.

இரயில்வே ஸ்டேஷன்-மாஸ்டர்கள்

வேலை நிறுத்தம்!

வரும் செப்டம்பர் 14—15-ந் தேதியன்றுமுதல் சம்பள உயர்வு உத்தியோக உயர்வுக்கான வாய்ப்புகள், இவை போன்ற கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தில் ஈடுபடப் போவதாக அகில இந்திய இரயில்வே ஸ்டேஷன்—மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன்-மாஸ்டர்கள் சங்கத்தவர், இரயில்வே நிர்வாகத்திற்கு 'நோட்டீஸ்' தந்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

சோஷலிஸ்டுகள் அறப்போர்!

சென்னை, ஆக. 5—

சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயரிடவேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை நிறைவேற்ற சோஷலிஸ்டுகள் நடத்தி வரும் போராட்டத்தில், மாநில அமைப்பாளர் திரு. துரைபாபு இன்று குணம்பேட்டையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருந்தும், மாநில கிளர்ச்சிக் குழு அமைப்பாளர் திரு. கண்ணப்பன் தலைமையில் மதுராந்தகம் தாலூகா அலுவலகத்தின்முன் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று சோஷலிஸ்டுக் கட்சியின் தலைமை நிலையம் அறிவித்துள்ளது.

செயலாளர் தந்தை கொலை

மாவட்டக் கழகச் சார்பில் நேரில் அனுதாபம்

ஆழ்வார்கற்குளம், ஆக. 1—

ஆழ்வார்கற்குளம் தி. மு. க. செயலாளர் தந்தை கொலை செய்யப்பட்டதை யொட்டி முழு விவரம் அறிய நெல்லை மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர்-எம். எஸ். அரியமுத்து, கழக உறுப்பினர் (குரிச்சி) என். சங்கரலிங்கம் ஆகியோர் ஆழ்வார்கற்குளம் சென்று செயலாளர் பார்வதிநாதன் அவர்களிடமும், அவரது வயோதிக தாயாரிடமும் மாவட்டக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு, சம்பவத்திற்கான காரணங்களை அறிந்து களவு எடுக்கச் சென்றவீடு, தீவைத்து நாசமாக்கப்பட்டுக் கிடக்கும் வீடுகள் கொலை நடந்த இடம் இவைகளை எல்லாம் பார்வையிட்டனர்.

மூன்றாண்டு பட்டப்படிப்பு

எதிர்பார்க்கும் நலன்கள்பற்றி தகவல்

புதுடில்லி, ஆக 6—

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு முறையை பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தியிருப்பதால் கிடைக்கக் கூடிய நலன்கள், மாணவர்களுக்கு அதனால் ஏற்படுகிற பலன்கள் குறித்து மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது:-

மாநிலங்களில் நடத்தப்படுகிற இரண்டு சர்க்கார் பரீட்சைகளில் ஒன்று இதனால் எடுபட்டுவிடும்;

மாணவர்கள் நிர்ணயமான இலட்சியமின்றி பல்கலைக் கழகங்களுக்குப் படிக்க வருவதை இது தடை செய்யும்; பல்வேறு தொழில் நுட்ப, தொழில் போதனை நிலையங்களில் சேருவதற்கு உயர்தரக் கலாசாலைப் படிப்பே போதுமானதாகும்;

செகண்டரி கல்விக் கட்டத்தில் நான்கு வருடப் படிப்பு ஏற்படுவதால் செகண்டரி கல்வியின் தரம் உயரும்;

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு முறை கொண்டுவரப்பட்டபடியால் பல்கலைக் கழகங்கள், முதலாவது பட்டப்படிப்புக்கு விரிவானதும் செறிவுள்ளதும் இணைப்புமுள்ள படிப்புத் திட்டத்தை வகுப்பது சாத்தியமாகும்;

மாணவர்கள் விஷயத்தில் இப்போதுள்ளதுபோல் இரண்டு தடவை புதிய படிப்பு முறைக்கு அவர்கள் தங்களை சரிக்கட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது; புதிய கலாசாலைகளில் சேரவேண்டிய அவசியமோ, இரண்டு பரீட்சைகளுக்குத் தயார் செய்கிற அவசியமோ இராது.

இத்திட்டத்தை ஆதரித்த பல்கலைக் கழகங்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி கேட்டதற்கு மத்திய அமைச்சர் பின்வருமாறு கூறினர்.

"1941-லேயே மூன்றாண்டு பட்டப் படிப்பை ஏற்படுத்திவிட்ட டில்லி பல்கலைக்கழகத்தையும் 1956-ல் அதை ஏற்படுத்திய ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தையும் தவிர, ஆந்திரா, உஸ்மானியா, எஸ். என். டி. டி. பெண்கள், பரோடா, நாகபுரி, திருவாங்கூர், சென்னை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள் 1957—58 முதல் இந்த முறையை அமுல் செய்யத் தீர்மானித்துள்ளன."

குஜராத், பஞ்சாப், ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகங்கள் இந்தத் திட்டத்தைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கின்றன:

உத்கல் பல்கலைக் கழகம் 1959-ல் பல்கலைக் கழகம் மூன்றிய வகுப்பை ஏற்படுத்துமென்றும், அதற்கு முன் ஏற்படுத்தாது என்றும் ஒரிசா சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய எஞ்சினீயர்களுக்கு மேல் நாடுகளில் பயிற்சி

ஒரு புள்ளி விவரம்

அமெரிக்காவில் உள்ள உருக்குத் தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்கப்படவிருக்கும் 1,000 இந்திய எஞ்சினீயர்களில், 115 எஞ்சினீயர்களைக் கொண்ட முதல் தொகுதியினர் 1957 ஜூலை 30-ந் தேதியன்று புதுடில்லியிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ரஷ்ய சர்க்கார் சுமார் 600 உருக்குத் தொழில் எஞ்சினீயர்களுக்குப் பயிற்சி வசதிகளை அளிக்க முன்வந்துள்ளனர்.

பிரிட்டிஷ் சர்க்கார், கொழும்புத் திட்டத்தின்கீழ், 300 எஞ்சினீயர்களுக்குப் பயிற்சி அளிக்கச் சம்மதித்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனி சர்க்கார், அந்நாட்டில் ஏற்கெனவே பயிற்சி பெறுகிற எஞ்சினீயர்களைத் தவிர பின்னும் 50 எஞ்சினீயர்களுக்குப் பயிற்சி அளிக்க முன்வந்திருக்கின்றனர்.

கானடாவும், ஆஸ்திரேலியாவும் முறையே 14 எஞ்சினீயர்களுக்கும், 12 எஞ்சினீயர்களுக்கும் பயிற்சி அளிக்கச் சம்மதித்துள்ளனர்.

நேரில் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக அமைந்த மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

சென்ற வருட ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஆகஸ்டில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஆகஸ்ட் 9-ந்தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 8—8—57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாக கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

எல்லா நேரங்களிலும் கல்வி நிலையம் திறந்திருக்கும்

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

‘காற்று வீசும் பக்கமெல்லாம் செல்வது ஆபத்தானது’

‘தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் சமுதாய விழிப்புணர்வைப் பொறுத்ததே’

சென்னையில் அண்ணா கருத்துரை

“தாழ்த்தப்பட்ட மக்கள், மொழி அடிப்படையில் தமிழர் என்றும், இன அடிப்படையில் திராவிடர் என்றும் தங்களைப் ‘பிரகடன’ப் படுத்திக் கொண்டு, பகிரங்கமாக திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இரண்டறக் கலந்து, எந்தவித சந்தேகத்திற்கும் இடம் தராமல், நமது எதிர்கால அரசியலில் நல்ல அறிகுறிகள் தோன்றியிருப்பதை மதிப்பிட்டு முழுமனதுடனும், நல்ல நம்பிக்கையுடனும் பாடுபட முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

“இன்று ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை நல்லபடி பயன்படுத்திக் கொண்டு, எல்லோரையும் ஒன்று திரட்டி, உருப்படியான ஆக்க வேலைகளை மேற்கொள்ள வாருங்கள் என்று கோருகிறேன்.

“நாடு வாழ, நலிவு போக, நல்வாழ்வுபெற திராவிட முன்னேற்றக் கழகத்தை மனதார நம்பி வாருங்கள் என்று பணிவன்புடன் அழைக்கிறேன்”

இவ்வாறு அண்ணா அவர்கள், 4—8—57-ல், சென்னை—மூலக் கொத்தளத்தில் டாக்டர் அம்பேத்கார் மன்றம்—கே. வி. கே. சாமி படிப்பகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேருரை ஆற்றுகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அன்பழைப்பு விடுத்துவிட்டு, மேலும் கூறியதாவது :—

பல கருத்துக்களைக் கொண்டிருப்பதுதானு?

“இந்தப் பகுதியில் வாழ்பவர்கள் பெரும்பாலோர் ஆதிதிராவிடர்கள். இன்று சமுதாயத்தில் அவர்கள் முன்னேற்றம் கான விழிப்புணர்ச்சி கொண்டுள்ளதை வரவேற்கிறேன். அவர்கள் ஏன் தாழ்த்தப்பட்டுள்ளனர்—எப்படித் தாழ்ந்தனர்—அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிகள் என்ன என்பதைப் பற்றி ஆராயவேண்டியது அவசியம்தான்; அது எதிர்பார்க்கக்கூடியதும்கூட!

“அவர்களின் வாழ்விலே காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்குத் தக்க பரிகாரம் என்ன என்பதைப் பற்றி பலர் பல கருத்தைக் கொண்டிருப்பதிலும் தவறில்லை. மதமாற்றம் தங்களுடைய வாழ்வில் ஏற்றம் தரும் என்று கருதுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் தனித்து இயங்கினால்தான் அரசியலில் ஏற்றம் காணமுடியும் என்று சிலர் நம்புகிறார்கள். அவர்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தினால் வாழ்வில் மாற்றம் ஏற்படும் என்று வேறு சிலர் கருதுகிறார்கள்.

“மொத்தத்தில், ‘துணி அழுக்காகிவிட்டது; சுத்தப்படுத்த வேண்டும்’ என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

“‘துணியைச் சுத்தப்படுத்துவதற்குத் துவைக்கவேண்டும்’ என்று சிலரும், ‘துவைக்கும்போது சத்தம் கேட்கக்கூடாது’ என்று வேறு சிலரும், ‘அழுக்கு போகவேண்டும்; ஆனால் துவைக்கக்கூடாது’ என்று மற்றவர்களும் கூறுவதுபோல, இன்றைய தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு சீர்பட ஒவ்வொருவர் ஒவ்வொரு கருத்தினையும், அவரவர் கருத்தே சரியானது என்றும் கூறிவருகிறார்கள். அவர்கள் அப்படிக் கூறுவதிலும் தவறில்லை. மொத்தத்தில் எல்லோருடைய முயற்சியும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வெவ்வேறு வழிகளில் நன்மை பயக்கும்; இலாபமும் ஏற்படும்.

ஒன்றைக் கொண்டே சாதிக்க முடியாது!

“ஆனால், அவர்களின் பிரச்சினையை ஆராய்ந்து, ஒன்றைக் கொண்டே எல்லாம் சாதித்துவிடலாம் என்று எதிர்பார்ப்பது நடைமுறையில் மிக்க ஏமாற்றத்தைத் தரும்.

“இன்றையத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் நான்கு; ஒன்று—அவர்கள் சமூகத்தில் தாழ்ந்து உள்ளனர்; அந்தநிலை போக்கப்பட வேண்டும்.

“வெறும் மத மாற்றம் அவர்களின் வாழ்வைச் சீர்படுத்துமா என்பது அவர்களுக்கு உள்ள இரண்டாவது பிரச்சினை.

“மற்றக் கட்சிகளுடன் கலக்காமல், தனித்து இயங்கினால் அரசியல் ஏற்றம் ஏற்படுமா என்பது அவர்களுக்கு உள்ள மூன்றாவது பிரச்சினை.

“நான்காவது பிரச்சினை;—பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற வேண்டுமென்பது.

இந்த நான்கு முக்கிய பிரச்சினைகளும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இதில் ஒன்றை மட்டும் அணுகினால் மற்ற மூன்று பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது! மதமாற்றத்தை மட்டும் கவனித்துவிட்டால் மற்ற மூன்றும் தீர்ந்துவிடாது. எப்படி ஒருவன் யானையின் துதிக்கையைப் பார்த்துவிட்டு, யானை ‘பாம்பு’போல் உள்ளது என்றால் அது சரியாகாதோ அதேபோன்றதுதான் ஒரு பிரச்சினையை மட்டும் கவனித்துவிட்டுப் பேசுவது!

“இப்படியே, ‘பொருளாதாரம் துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால் அவர்கள் பாடுபட்டு உழைத்து, மிச்சப்படுத்தியுள்ளதை வைத்துக் கொண்டு முன்னேற வேண்டும்’ என்று கூறுவதும் மற்றப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படாது.

“சமுதாயத்தில் உள்ள இழிநிலையைப் போக்க கலப்பு மணம் தக்க பரிகாரம் என்று சொல்வது உண்மைதான்; ஆனால் அது மற்ற துறைகளில் உள்ள சிக்கல்களைப் போக்கிவிடாது.

“நண்பர் இரத்தினம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ‘தாழ்த்தப்பட்டவர்கள் தனித்து இயங்குவதுதான் அரசியல் ஏற்றத்திற்கு நல்ல வழி, என்பதும் ஓரளவுக்குச் சரிதான்; ஆனால் அது மட்டும் அவர்களின் எதிர்காலத்தைச் சீர்படுத்திவிடாது.

‘தப்புக் கணக்குப் போட்ட அமைச்சர்!

“இப்படி, நாட்டில் உள்ள பல கட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு பரிகாரங்களைத் தங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டு வேலை செய்கின்றன. அமைச்சர் கக்கன் கூட, ‘தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறியுள்ளனர்’ என்று சட்டசபையில் கூறினார்; ‘இப்போது அவர்களிடம் வெள்ளிப் பாத்திரங்களும், தங்கமும் நடமாடுகின்றன’ என்று பெருமைப் பட்டுக் கொண்டார். அவர், யாரோ ஒருசிலர் முன்னேறியுள்ளதைக் கொண்டு, அந்த சமுதாயமே முன்னேறியுள்ளது என்று தப்புக்கணக்குப் போட்டுள்ளார்.

சமுதாயத்தின் மதிப்பை அவ்வாறு அளவிடுவது?

“ஒருசிலரின் முன்னேற்றம் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமாகாது. அந்தமுறையில் கணக்கிடுவதும் தவறானதாகும். மேலும் பணத்தைக் கொண்டு ஒரு சமுதாயத்தின் மதிப்பை அளவிடுவதே அடிப்படையில் தவறானதாகும். இன்றைய பிரச்சினையைத் தீர்க்க அது நல்லதல்ல! உண்மையில், உள்ள பிரச்சினைகளை அனைவரும் ஆராய்ந்து, அவர்களின் நலனுக்கு அக்கறையுடன் முயற்சி செய்யவேண்டும்.

காற்றடிக்கும் பக்கமெல்லாம் செல்வது ஆபத்தல்லவா?

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்று எல்லோருமே பரிந்து பேசுகிறார்கள். அவர்கள் நலனைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டுள்ளதாகவும் கூறுகிறார்கள். இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பது அந்த சமுதாயத்திற்கு நல்லதுதான்.

“12 வயதுடைய ஒரு சிறு பையன், வானத்தில் அறுபட்டுப் பறக்கும் காற்றாடியை மாடியில் இருந்து பார்த்துவிட்டு, கீழே இறங்கிவந்து அது பறக்கும் திசையைநோக்கி ஓடவும், அந்தக் காற்றாடி வேறுபக்கம் திரும்பினால் தானும் அந்தப் பக்கம் திரும்பவும், முடிவில் அந்தக் காற்றாடியைப் பெற முயற்சிக்கவும் செய்கிறான். அந்தப் பையன் பார்த்தது ஒரே காற்றாடிதான்; ஆனால் அதை அடைய அவன் பின்பற்றிய வழிகள் பலபல!

“ஒரு காற்றாடிக்கே இவ்வளவு கஷ்டம் என்றால், ஒரு இனம் முன்னேற வேண்டுமென்றால், யாரை எல்லாம் நம்பவேண்டி வரும்? எவர் அழைப்பை எல்லாம் ஏற்கவேண்டி வரும்? எவர் காட்டும் வழியில் எல்லாம் நடைபோடவேண்டிவரும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

“இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களும் அப்படித்தான் யார் யாரையோ நம்பி, எதை எல்லாமோ எதிர்பார்த்து, இறுதியில், ‘நம்மை ஏமாற்றி பிறர் ஏற்றம் கண்டனர்; பதவிக்கு வந்துவிட்டனர்; புகழைத் தேடிக்கொண்டனர்’ என்று உணரும் கட்டத்தை வந்தடைந்துள்ளனர்.

அந்த ‘மாபெரும்’உணர்வு மற்றவர்களுக்கு இல்லை’

“தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று நேற்று தோன்றியவர்கள் அல்ல; இந்த நாட்டை வெள்ளைக்காரன் ஆளுவதற்கு முன்னாலே — நாயன்மார்கள் காலத்திலும் இருந்திருக்கின்றனர்; ஆழ்வாராதிகள் காலத்திலும் இருந்திருக்கின்றனர். அவர்களில் ஒரே ஒரு நந்தனார் மட்டும்தான் மோட்சம் அடைந்தாரென்றும்கூறப்படுகிறது-அதுவும் கதையில்! மற்றவர்களுக்கு அந்த உயர்வு ஏற்படவில்லை; எனவே, இந்தப் பழைய பிரச்சினையை—நெடுநாட்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகம் தீர்க்க வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ளது; இன்று நேற்றல்ல—தேர்தல் காலத்தில் இருந்தல்ல-பல ஆண்டுகாலமாக தொடர்ந்து அக்கறை செலுத்திவரும்பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்களைச் சேரும்.

“சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நான் இங்கு நகர சபைத் தேர்தலுக்குப் போட்டியிட்டேன். அப்போது நான் ‘ஓட்’ கேட்பதற்காகச் சேரிக்குச் சென்றிருந்தேன். அங்கே ‘ஓட்’டையும் கேட்டுவிட்டு அவர்கள் வீட்டிலேயும் சாப்பிட்டு வந்தேன். வரும்போது அவர்களைப் பார்த்து, ‘இன்று நான் ‘ஓட்’ கேட்க வந்தேன்; உங்கள் வீட்டில் சாப்பிட்டேன். நாளை காங்கிரஸ்காரர்கள் வருவார்கள்; ‘ஓட்’ கேட்பார்கள்; அவர்களையும் நீங்கள் சாப்பிடச் சொல்லுங்கள்’ என்று கூறிவிட்டு வந்தேன்; அதேபோல, மறுநாள் காங்கிரஸ்காரர்கள் போனார்கள்; அப்போது தோழர் என்.வி. நடராசன் அவர்கள் காங்கிரசில் இருந்தார்; அவரும் போனார்; அவர்கள் போய் ‘ஓட்’ கேட்டதும், ‘சாப்பிட வாருங்கள்’ என்று கையைப் பிடித்துக் கொண்டனர்; என்ன செய்வார்கள்? சீனுவாச அய்யர் என்று கருதுகிறேன்—அவரும், என். வி. நடராசனும் முதல் தடவையாக சேரியில் சாப்பிட்டார்கள்; அவர்களைச் சாப்பிட வைத்தவன் நான்தான். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நாம் எந்த அளவுக்கு விழிப்புணர்ச்சி கொண்டுள்ளோமோ அதைப் பொறுத்தே மற்றவர்களுடைய செயலும் அமையும்.

அக்கறையற்றவர்கள் நாமல்லவே!

“இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சிறிதும் அதிருப்தி அடையாத வகையில் நமது கழகம் பணியாற்றி வருகிறது. சிலருக்கு—எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதுபோல—ஒருசில சந்தேகங்கள் எழக்கூடும். அதைப் பற்றி நாம் அக்கறை கொள்ளாமல் இல்லை. இன்று நாட்டுப் பிரிவினையில் ஈடுபட்டுள்ள தி. மு. கழகத்திற்கு அதைத்தவிர வேறு பிரச்சினைகளைக் கவனிக்க அக்கறையோ, நாட்டமோ, அவகாசமோ இல்லை என்று கருத வேண்டாம்.

‘ஒரு வண்டிக்காரன் குதிரையைத் தட்டிக்கொடுத்து ஓட்டுவதானாலும், அந்த வண்டிக்காரன் காதில் ஒரு வண்டு குடையும்போது அதைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாமலா இருப்பான்? அந்த வண்டையும் தட்டிவிட்டுத்தான் வண்டியை ஓட்டுவான். அதே போன்றுதான், தி. மு. கழகமும் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினையிலும் அக்கறை செலுத்தி, தக்க பரிகாரம் தேடி வந்துள்ளது. எனவே, தாழ்த்தப்பட்டவர்கள் கழகத்தில் சேர்ந்து, நெருங்கிய ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய விழிப்புணர்வு என்றைக்கும் இருக்கட்டும்!

“இன்றையத் தினம் தாழ்த்தப்பட்டவர்களில் பல இளைஞர்கள் நல்ல விழிப்புணர்ச்சி பெற்றிருக்கின்றனர். சட்டசபையில்கூட, காங்கிரஸ் கட்சியிலே உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் நன்றாகப் பேசுகிறார்கள். சாதி இந்துக்கள் முகம் சுளித்துக்கொள்ளும் அளவிற்கு விஷயத்தை ஆராய்ந்து வாதாடுகிறார்கள். அவர்கள் கதர் போட்டிருப்பதைத் தவிர, நாம் பேசுவதற்கும் அவர்கள் பேசுவதற்கும் மாறுதலே காணப்படவில்லை. இதனால்தான், நான் சட்டசபையிலே பேசும்போது குறிப்பிட்டேன்—‘எங்களோடு இருக்கவேண்டியவர்கள், தேர்தலின் காரணமாக உங்களிடம் இருக்கிறார்கள்’—என்று!

“இத்தகைய விழிப்புணர்ச்சி, தாழ்த்தப்பட்ட இளைஞர்களிடையே எல்லாத் துறையிலும் எப்போதும் பரிணமித்து இருக்கவேண்டும்.

“15 ஆண்டுகளுக்குமுன் நிலைமை இப்படி இருந்ததில்லை. ‘ஆதித்திராவிடன்’ என்று வெளியே சொல்லிக்கொள்ளக் கூட வெட்கப்பட்டனர். நான் காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்கு வரும்போது, ஒரு டிக்கெட் பரிசோதகர் நாள்தோறும் என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார்; அவர் ஒரு நாள், ‘ஆதிதிராவிடர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?’ என்று கேட்டார்; ‘ஏன்; நீங்கள் அந்த சாதிதானே?’ என்று நான் கேட்டேன்; ‘ஆமாம்’ என்று அவர் தயங்கிப் பதில் கூறினார்; ‘ஏனையா, உங்கள் சாதியை வெளியே சொல்ல வெட்கப்படுகிறீர்?’ என்று நான் கேட்டதற்கு, ‘என்ன சார் செய்வது; ஒரு சிலர் தவறாக நினைத்துக்கொள்வார்கள்; அதனால்தான்’ என்றார்.

“இந்த நிலை மாறவேண்டும். நியாயத்தைப் பெற தைரியமாக இளைஞர்கள் வாதாடவேண்டும். பிறந்த சமுதாயத்தின் நலனைப் பாதுகாக்கவும் முன்வரவேண்டும்.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

சென்னை - பச்சையப்பன் கல்லூரியில் பொதுச்செயலாளர்

8—8—57 வியாழன் மாலை 4-15 மணிக்கு, பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் துவக்கவிழா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசுவார்.

கழகக் கூட்டங்கள்

★

கதிராமங்கலம் :
பூங்காவில்
9—8—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : சு. பத்மநாபன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
கோ. சி. மணி
இன்னிசை :
குத்தாலம் அரங்கநாதன் குழுவினர்

★

மடத்துவாசல் :
(நாகர்கோவில வட்டம்)
தி. மு. கழகத் துவக்கவிழா
9—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : கி. மனோகரன்
பேசுபவர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்

“9—8—57 மாலை 4-மணிக்கு நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல் வடசேரியிலுள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்”

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் எம். சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

பஞ்சாபில் கசையடித் தண்டனையை ரத்து செய்வதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிறார்.

* * *

1957 மே மாதத்தில் வேலை உதவி கோரி மொத்தம் 1,48,035 பேர் பதிவு செய்து கொண்டனர்; ஏப்ரல் மாதத்தில் 1,45,438 பேர்தான் பதிவு செய்துகொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் [illegible]